## 4

### திறவுகோல் வசனம்: யாத்திராகமம் 12:1-30

# பழைய ஏற்பாட்டில் முன்னிழல் இடப்பட்டது

பழைய ஏற்பாட்டின் பல்வேறு நடைமுறைகள், புதிய ஏற்பாட்டின் நடைமுறைகளை முன்நிழல் இட்டன. இவைகள் "மாதிரிகள்" அல்லது "அடையாளங்கள்" (*tupos*) என்று அறியப்படுகிற, புதிய ஏற்பாட்டு உண்மை நிலைகளின் (*antitupos*) "முன்னடையாளங்களாக" உள்ளன.

ஆதாம் இயேசுவுக்கு "முன்னடையாளமாக" இருந்தார் (ரோமர் 5:14), எனவே இயேசு "முன்னடையாளமாக" இருக்கிறார். தண்ணீர் மூலமாக நோவா பேழைக்குள் பாதுகாக்கப்பட்டது ஞானஸ்நானத்தின் அடையாளமாக இருந்தது:

> அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியமாற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது (1 பேதுரு 3:20, 21).

பேழைக்குள் இருந்தவர்கள் தண்ணீர் மூலமாக உலகப்பிரகாரமாக விடுவிக்கப்பட்ட நிகழ்வானது, இப்போது நம்மை இரட்சிக்கும் உண்மை நிலையின் (நிஜத்தின்) நிழலாக (முன்னடையாளமாக) உள்ளது. இஸ்ரவேல் மக்கள் உயிர்பிழைக்கும்படி உயர்த்தப்பட்ட சர்ப்பமானது, நாம் நித்திய ஜீவனைப் பெறும்படிக்கு சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசுவுக்கு முன்னடையாளமாக உள்ளது (யோவான் 3:14, 15).

ஒரு மரத்தின் நிழல் இருப்பதற்கு முன்னர் அந்த மரம் இருக்க வேண்டும். இதற்கு நேர்மாறாக, பழைய ஏற்பாட்டு அடையாளங்கள் அல்லது நிழல்கள் முதலாவதாக வந்தன; பின்பு புதிய ஏற்பாட்டு முன்னடையாளங்கள், நிஜங்கள், உண்மை நிலைகள் அவற்றை நிறைவேற்றின. பழைய ஏற்பாட்டு அடையாளங்கள் வழக்கமாக, புதிய ஏற்பாட்டு ஆவிக்குரிய உண்மைநிலையின் உலகப்பிரகாரமான பிரதிநிதித்துவங்களாக இருந்தன (ரோமர் 2:29; 7:6; 2 கொரிந்தியர் 3:6).

கர்த்தருடைய இராப்போஜனத்தை முன்னுருவகித்தல் என்பது, யூதர்களின் பல்வேறு அமைப்புகளில் காணப்பட முடியும்: நினைவுச் சின்னங்கள், விசேஷமாக பஸ்கா, பலிகள், உடன்படிக்கைகள் மற்றும் இராஜ போஜனங்கள்.

## நினைவுச் சின்னங்கள்

பழைய ஏற்பாட்டில் மாபெரும் நிகழ்வுகளை மக்கள் நினைவில் கொண்டிருக்க உதவுவதற்கு, நினைவுகூருதல்களைத் தேவன் பயன்படுத்தினார்.

> நபர்கள் மற்றும் நிகழ்வுகளில் மிகவும் மதிப்புள்ளவற்றைப் பாதுகாத்தல் மற்றும் நிலைபேறடையச் செய்தல் என்பதே நினைவுச் சின்னங்களின் குறிக்கோளாக உள்ளது ...
>
> ஒவ்வொரு நினைவுச் சின்னமும் ஏதேனும் சில விஷயங்களை நினைவுகூருகிறது, இல்லையென்றால் அது தனது தனிசிறப்பை இழந்து தகுதியற்றதாகி விடுகிறது. நினைவுச் சின்னத்தைத் தகுதிப்படுத்தும் விஷயம் எதுவோ அது - வழக்கமாக சகாப்தத்தை ஏற்படுத்தும் நபர்கள், நிகழ்ச்சிகள் அல்லது பொருட்கள் என்பது - வழக்கத்திற்கு மாறாக மதிப்புடையதாக உள்ளது.[1]

பழைய ஏற்பாட்டின் நினைவுச் சின்னங்களுக்கான உதாரணங்களில் பின்வருபவை உள்ளடங்குகின்றன:

- தேவன் மேகங்களில் வானவில்லை வைத்தபோது, எல்லா மாம்சஜீவன்களையும் அழிக்க இனி ஜலமானது பிரளயமாய்ப் பெருகாது என்று கூறினார் (ஆதியாகமம் 9:13-17). வானவில் என்பது எல்லா மனுக்குலத்துடனும் தேவனுடைய உடன்படிக்கையை நினைப்பூட்டுவதாய் இருக்கிறது.
- தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு, வாரந்தோறும் ஏழாம் நாளில் ஆசரிப்பதற்கு ஓய்வுநாளை கொடுத்தார் (யாத்திராகமம் 20:10; உபாகமம் 5:14). அவர் எகிப்திய அடிமைத்தளையில் இருந்து மக்களை விடுவித்திருந்தார் என்பதை அவர்கள் மனதில் காத்துக்கொள்ள வேண்டி இருந்தது.
- தேவன் இஸ்ரவேல் மக்கள்மீது கடந்துசென்று, கதவுநிலைகளில் இரத்தம் தடவப்பட்டிருந்த இல்லங்களில் இருந்த முதற்பேறானவர்களைக் கொல்லாது விட்டார் என்பதை அவர்கள் நினைவுகூரும்படி இஸ்ரவேல் மக்களுக்கு பஸ்கா பண்டிகை தரப்பட்டது. மக்கள் பஸ்கா உணவை உண்டபோது, அவர்கள் எகிப்திய அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட்டபோது அதைச் சுற்றி நடந்த நிகழ்வுகளை நினைவு கூரவேண்டியிருந்தது.
- யோசுவா, இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக் கடந்து செல்லத் தேவன் அனுமதித்தார் என்பதன் நினைவுச் சின்னமாகப் பன்னிரெண்டு ஆண்களை யோர்தான் நதியில் இருந்து ஆளுக்கு ஒவ்வொரு கல்லாக எடுத்துவரும்படி செய்தார். இது உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து சென்ற ஆசாரியர்களால் வழிநடத்தப்பட்ட மக்கள், கடந்து செல்லும்படி தேவன் ஆற்றின் ஓட்டத்தை எவ்வாறு நிறுத்தியிருந்தார் என்பதை, அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கூறுவதற்கான ஒரு நினைவூட்டும் பொருளாக இருந்தது (யோசுவா 3:11-4:7).

பழைய ஏற்பாட்டில் உள்ள நினைவுச்சின்னங்கள், முக்கியமான நிகழ்வுகளை

*மக்கள் நினைவுகூர உதவின. கர்த்தருடைய பந்தியை இயேசு, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கூறி ஒரு நினைவுச்சின்னமாக ஏற்படுத்தினார் (1 கொரிந்தியர் 11:24; காண்க வசனம் 25).*

## பலிகள்

*நிழல்கள் என்ற வகையில் நியாயப்பிரமாணத்தின் பலிகள், இயேசுவின் பலிக்குப் பின்னணித் திரையொன்றை அளித்தன.*

> *இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது (எபிரெயர் 10:1).*

*நியாயப்பிரமாணத்தின்கீழ் பலிகள் அளிக்கப்பட்டபோது, பாவிகள் தங்கள் பாவங்களை நினைத்தனர். "அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது" (எபிரெயர் 10:3). இதே விஷயம் கர்த்தருடைய பந்தியை நாம் கடைப்பிடிக்கையிலும் உண்மையாக உள்ளது. நமது பாவங்களை எடுத்துப்போடும்படி இயேசு கொடுத்த பலியின் மீது நாம் கவனம்குவிக்கையில், நாம் நமது பாவங்களை நினைக்கிறோம் (மத்தேயு 26:26-28; 1 கொரிந்தியர் 11:23-25).*

## உடன்படிக்கை

*பத்துக்கட்டளைகளை உள்ளடக்கிய முதலாம் உடன்படிக்கை, இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து புறப்பட்டபின் கொஞ்ச நாட்களிலேயே அவர்களுடன் ஏற்படுத்தப்பட்டது. உடன்படிக்கையின் இருதயம் போன்ற மையப்பகுதியான பத்துக்கட்டளைத் தேவன் தாமே எழுதிக் கொடுத்திருந்த இரு கற்பலகைகளை, உடன்படிக்கைப் பெட்டிக்குள் மோசே வைத்தார்.*

*முதல் உடன்படிக்கை இஸ்ரவேல் மக்களின் பாவங்களுக்கு இரக்கத்தையும் மன்னிப்பையும் முற்றிலுமாக அளிக்காத காரணத்தால் அதைச் செய்கிற இரண்டாவது உடன்படிக்கையைக் கொண்டு தேவன் அதை இடம் மாற்றினார் (எபிரெயர் 8:7, 8, 12, 13). எரேமியா பின்வருமாறு தீர்க்கதரிசனம் கூறினார்:*

> *இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோட பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல ... (எரேமியா 31:31, 32அ).*

*புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரான இயேசு (எபிரெயர் 12:24), "இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்" போட்டார் (எபிரெயர் 10:9).*

*இரு உடன்படிக்கைகளுமே இரத்தத்தைக் கொண்டு அர்ப்பணிக்கப்பட்டன*

*(யாத்திராகமம் 24:5-8; எபிரெயர் 9:18-20). மிருகத்தின் இரத்தம், இரக்கம் மற்றும் மன்னிப்பு ஆகியவற்றின் புதிய உடன்படிக்கையில் அர்ப்பணிக்கப்பட்ட இயேசுவின் இரத்தத்தை முன்னுருவப்படுத்திற்று (மத்தேயு 26:28). இந்த உடன்படிக்கையின் தேவன், இயேசுவுக்குக் கீழ்ப்படிபவர்களின் பாவங்களை மன்னிக்க ஒப்புக்கொண்டு இருக்கிறார். இயேசுவின் இரத்தத்தினால் அவர் நமது பாவங்களில் இருந்து நம்மைச் சுத்திகரிப்பார் மற்றும் அவற்றை இனியும் நினையாதிருப்பார் (எபிரெயர் 8:12).*

## ஒரு இராஜ போஜனம்

*அரசரின் உணவு மேஜையில் கனமுள்ள பிறருடன் சேர்ந்து உணவு உண்ணுதல் என்பது ஒரு மாபெரும் சிலாக்கியமாகக் கருதப்பட்டது. தாவீது தமது உணவு மேஜையில் மேவிபோசேத் உண்ணும்படி ஏற்பாடு செய்தார் (2 சாமுவேல் 9:6-10). அவர் அப்சலோமுக்கு முன்பாக ஓடிப்போகையில் பர்சிலாய் என்பவர் செய்த உதவிக்கு மதிப்புக் காண்பிக்கும் வகையில், பர்சிலாயின் குமாரர்கள் சாலொமோனுடைய உணவு மேஜையில் உணவு உண்ண அனுமதிக்கப்பட வேண்டும் என்று சாலொமோனிடத்தில் வேண்டிக் கேட்டுக்கொண்டார் (1 இராஜாக்கள் 2:7). சாலொமோனின் உணவு மேஜையில் பலர் கனப்படுத்தப்பட்டனர் (காண்க 1 இராஜாக்கள் 4:27). பாபிலோன் அரசரான ஏவில் மெரொதாக் என்பவர் யோயாக்கீனைச் சிறைச்சாலையில் இருந்து புறப்படப்பண்ணி நித்தம் தனக்கு முன்பாக உணவு உண்ணும்படி செய்ததன் மூலம் அவரை மேன்மைப்படுத்தினார் (2 இராஜா 25:29; ஏரேமியா 52:33).*

*கர்த்தருடைய பந்தியில் அப்பத்தை உண்ணுதலும் திராட்ச ரசத்தைப் பானம் பண்ணுதலும்கூட ஒரு கனத்திற்குரிய விஷயமாக உள்ளது. இது, இயேசுவையும் அவர் நமக்காகப் பாடுபட்டதையும் நினைவுகூர ஒன்றுகூடியுள்ள சக குடிமக்களுடன் நாம் பகிர்ந்துகொள்ளும் ஒரு இராஜ போஜனமாக உள்ளது (காண்க பிலிப்பியர் 3:20). பங்கேற்கும் நாம் மாபெரும் வகையில் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறோம், ஏனெனில் இயேசுவின் இராப்போஜனத்தின்போது, நாம் ஒருவர் மற்றவருடனும் மாபெரும் அரசரான இயேசுவுடனும், அவரது பந்தியில் ஐக்கிய விருந்து உண்ணும்படியான சிலாக்கியத்தைக் கொண்டுள்ளோம் (மத்தேயு 26:29; லூக்கா 22:30; காண்க 14:25; 1 கொரிந்தியர் 10:21).*

## தொகுப்புரை

*பழைய ஏற்பாட்டின்கீழ் இருந்த நடைமுறைகள், புதிய உடன்படிக்கையின் உண்மைநிலைகளுக்கு முன்னடையாளங்களாக இருந்தன. இவற்றில் சில, கர்த்தருடைய இராப்போஜனத்தை முன்னுருவகப்படுத்தின. இவைகள் கர்த்தருடைய இராப்போஜனத்தைப் புரிந்துகொள்ளவும் அதன் அர்த்தத்தை மதிக்கவும் நமக்கு உதவக்கூடும்.*

---

*குறிப்பு*

[1]Guy B. Funderburk, “Memorial, Memory,” *The Zondervan Pictorial Encyclopedia of the Bible,* ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1975), 4:179.

# பஸ்கா ஒரு முன்னடையாளம்

கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பஸ்காவுடன் பல்வேறு வழிகளில் ஒப்பிட முடியும். பின்வரும் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்:

| *பஸ்கா* | *கர்த்தருடைய இராப்போஜனம்* |
|---|---|
| **ஒற்றுமைகள்** | |
| *இது மக்கள் கூட்டம் ஒன்றினால் உண்ணப்பட்டது (யாத்திராகமம் 12:3, 4).* | *ஒரு மக்கள் கூடுகையினால் அப்பம் உண்ணப் பட்டு திராட்சரசம் குடிக்கப்படுகிறது (1 கொரிந்தியர் 11:33).* |
| *இதுதேவனுடைய அன்பின் வெளிப்பாடாக இருந்தது (ஓசியா 11:1).* | *இது அன்பின் வெளிப்பாடாக உள்ளது (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 1:5).* |
| *இது பழுதற்ற ஆட்டுகுட்டியைப் பலிசெலுத்துதலை உள்ளடக்கி இருந்தது (யாத்திராகமம் 12:5).* | *இயேசு குற்றமற்றவராக இருந்தார் (2 கொரிந்தியர் 5:21; எபிரெயர் 4:15; 1 பேதுரு 1:19).* |
| *ஒரு ஆண் மிருகம் கொல்லப்பட்டது (யாத்திராகமம் 12:5).* | *ஆணாக இருந்த இயேசு கொல் லப்பட்டார் (மத்தேயு 1:21, 25).* |
| *இரத்தத்தின் மூலமாக ஜீவனைத் தரும்படிக்கு ஒரு மரணம் நிகழ்ந்தது (யாத்திராகமம் 12:7, 13).* | *இரத்தத்தின் மூலமாக ஜீவனைத் தரும்படிக்கு இயேசுவின் மரணம் நிகழ்ந்தது (யோவான் 6:54; காண்க ரோமர் 5:10).* |
| *இது நியமிக்கப்பட்ட நாளில் கடைப்பிடிக்கப்பட்டது (யாத்திராகமம் 12:6; எண்ணாகமம் 9:2-5).* | *இது நியமிக்கப்பட்ட நாளில் கடைப்பிடிக்கப்படுகிறது (நடபடிகள் 20:7).* |
| *பண்டிகையில் புளிப்பில்லாத அப்பம் உண்ணுப்பட்டது (யாத்திராகமம் 12:8).* | *புளிப்பில்லாத அப்பம் உண்ணப்படுகிறது (1 கொரிந்தியர் 5:8).* |
| *விடுதலைக்காக இரத்தம் சிந்தப்பட்டது (யாத்திராகமம் 12:13).* | *மன்னிப்பிற்காக இரத்தம் சிந்தப்பட்டது (மத்தேயு 26:28).* |
| *முதற்பேறானவர்களை மரணத்தில் இருந்து காக்கும்படிக்கு இரத்தம் சிந்தப்பட்டது (யாத்திராகமம் 12:12, 13).* | *முதற்பேறானவர்களான சபையாருக்காக இரத்தம் ஒப்புக்கொடுக்கப்பட்டது (எபிரெயர் 12:23; நடபடிகள் 20:28).* |
| *தேவன் செய்திருந்ததை நினைவுகூரும்படிக்கு உண்ணுதல் நிகழ்ந்தது (யாத்திராகமம் 12:14).* | *இயேசுவின் பலியை நினைவுகூருதல் நிகழ்கிறது (1 கொரிந்தியர் 11:24, 25).* |
| *இது மீண்டும் மீண்டும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒரு நினைவுகூருதலாக இருந்தது (யாத்திராகமம் 12:14, 17, 24).* | *இது தொடர்ந்து நினைவுகூருதலாக உள்ளது (1 கொரிந்தியர் 11:26).* |
| *ஆட்டுக்குட்டியானது மற்றவர்களால் பலியாகச் செலுத்தப்பட்டது (யாத்திராகமம் 12:21-23).* | *ஆட்டுக்குட்டியானவர் மற்றவர்களால் பலியாகச் செலுத்தப்பட்டார் (நடபடிகள் 2:23).* |

| | |
|---|---|
| இது தேவனுடைய மக்களால் ஆசரிக்கப்பட வேண்டியதாக இருந்தது, விருத்தசேதனம் இல்லாதவர்கள் இதில் உண்ணக்கூடாது இருந்தது (யாத்திராகமம் 12:42-48). | இது ஆவிக்குரிய வகையில் விருத்தசேதனம் பண்ணப்பட்ட ஒரே சரீரத்திற்கு (சபைக்கு) உரியதாக உள்ளது (கொலோசெயர் 2:11-13). |
| பலி செலுத்தப்பட்ட போது எலும்புகள் எதுவும் முறிக்கப்படவில்லை (யாத்திராகமம் 12:46). | இயேசு மரித்தபோது அவரது எலும்புகள் முறிக்கப்படவில்லை (யோவான் 19:32, 33). |
| **வேறுபாடுகள்** | |
| இது மாம்சப்பிரகாரமான குடும்ப அலகுகளுக்கு ஆனதாக இருந்தது (யாத்திராகமம் 12:3). | இது ஆவிக்குரிய குடும்பத்திற்கு ஆனதாக உள்ளது (காண்க 1 கொரிந்தியர் 10:17). |
| ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒன்று என்ற கணக்கில் பல ஆட்டுக்குட்டிகள் கொல்லப்பட்டன (யாத்திராகமம் 12:3). | ஒரே ஒரு மரணம் நிகழ்ந்தது (எபிரெயர் 7:27; 9:24-28; 10:10, 12, 14). |
| ஆட்டுக்குட்டியின் இரத்தம் தேவனுடைய மக்களால், கதவு நிலைகளில் தடவப்பட்டது (யாத்திராகமம் 12:7, 21, 22). | இயேசுவின் இரத்தம் அந்நியரான ரோமப் போர்ச் சேவகரால் சிந்தப்பட்டது (யோவான் 19:34). |
| மாலை வேளையில் ஒரு ஆட்டுக்குட்டி கொல்லப்பட்டு, எதுவும் மீதம் வைக்கப்படாது உண்ணப்பட்டது (யாத்திராகமம் 12:8-10). | தேவ ஆட்டுக்குட்டியான இயேசு (யோவான் 1:29) கொல்லப்பட்டார் மற்றும் அவர் திரும்பவும் வருமளவும் அப்பத்தை உண்பதில் அவர் மீண்டும் மீண்டும் நினைவுகூரப்படுகிறார் (1 கொரிந்தியர் 11:23-25). |
| இது தேவன் செய்திருந்தவற்றைப் பின்னோக்கி மாத்திரம் கண்ணுற்றது (யாத்திராகமம் 12:14). | இது இயேசுவின் மரணத்தைப் பின்னோக்கியும் அவரது மறுவருகையை முன்னோக்கியும் காண்கிறது (1 கொரிந்தியர் 11:23-26). |
| பண்டிகையின் முதல் மற்றும் கடைசி நாட்களில் எந்த வேலையும் செய்யப்படக்கூடாது (யாத்திராகமம் 12:16; உபாகமம் 16:8). | வேலையை விட்டொழித்தல் தேவைப்படுவது இல்லை. |
| ஆட்டுக்குட்டியின் இரத்தம், முதற்பேறானவர்களைக் கொல்லாதிருக்கும்படி தேவன் பார்பதற்கானதாக இருந்தது (யாத்திராகமம் 12:12, 13, 23). | இயேசுவின் இரத்தம் பாவங்களை மன்னித்தது மற்றும் புதிய உடன்படிக்கையை அர்ப்பணித்தது (மத்தேயு 26:28). |
| ஆட்டுக்குட்டியின் மரணம் அல்ல ஆனால் தேவனுடைய செயலே நினைவுகூரப்பட்டது (யாத்திராகமம் 12:42). | இயேசுவும் அவரது மரணமும் நினைவுகூரப்படுகின்றன (1 கொரிந்தியர் 11:23-26). |
| இது தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட ஒரு இடத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டியதாக இருந்தது (உபாகமம் 16:5, 6). | விசேஷித்த இடம் எதுவும் தேர்ந்துகொள்ளப்படவில்லை (யோவான் 4:21). |

| | |
|---|---|
| *இது ஆண்டிற்கு ஒருமுறை ஒரு வாரம் முழுவதும் கடைப்பிக்கப்பட வேண்டியதாக இருந்தது (உபாகமம் 16:1, 8).* | *இது வாரத்தின் முதல்நாளில் கடைப்பிடிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது (நடபடிகள் 20:7).* |

*இஸ்ரவேல் மக்களுக்குப் பஸ்காவைக் கொடுத்ததன் மூலம் தேவன் நினைவுச்சின்னம் என்ற வகையில் கர்த்தருடைய இராப்போஜனத்தை முன்னிழல் இட்டார். பவுல், நமது பஸ்காவான கிறிஸ்து பலியிடப்பட்டார் என்று எழுதினார் (1 கொரிந்தியர் 5:7). இவ்வாறாக இவ்விரு பண்டிகைகளுக்கும் இடையில் ஒரு அடையாளத்துவம் ஏற்படுத்தப்பட்டது.*